| | வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | மாவட்டம் : | **தேனி** | காலம் : | **27/04/2024** | முதல் | **01/05/2024** |
| | அறிக்கை எண் : | **034/ 2024** | வெளியீட்டு நாள் : | **26/04/2024** | | |

## தேனி மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 40°-41° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 27° செல்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.

| கடந்தவார வானிலை (21.04.2024 **முதல்** 25.04.2024) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 01-05-22024- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 21/04 | 22/04 | 23/04 | 24/04 | 25/04 | தேதி | நாள்-1<br>27/04 | நாள்-2<br>28/04 | நாள்-3<br>29/04 | நாள்-4<br>30/04 | நாள்-5<br>01/05 |
| 0.2 | 0.0 | 0.4 | 3.5 | 0.0 | மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 0 | 0 |
| 41 | 40 | 41 | 40 | 40 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 37 | 37 | 38 | 38 | 38 |
| 27 | 27 | 27 | 27 | 27 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 26 | 26 | 26 | 27 | 27 |
| 4 | 3 | 3 | 3 | 1 | மேக மூட்டம் (ஆக்டா) | 2 | 5 | 5 | 4 | 4 |
| 74 | 62 | 61 | 81 | 66 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 70 | 70 | 70 | 80 | 80 |
| 44 | 43 | 51 | 39 | 40 | | 20 | 20 | 20 | 20 | 20 |
| 8 | 11 | 15 | 9 | 4 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 8 | 6 | 8 | 6 | 6 |
| தென் கிழக்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு | காற்றின் திசை | கிழக்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு | தென் மேற்கு | தென் மேற்கு |

## குறுஞ்செய்தி :

அடுத்த 5 நாட்களுக்கு வறண்ட வானிலையே நிலவ வாய்ப்பு. அதிகபட்ச வெப்பநிலையானது 37°-38° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 26° - 27° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 6முதல் 8 கி.மீ வேகத்தில், கிழக்கு, தென்கிழக்கு மற்றும் தென்மேற்கு திசைகளிலிருந்து காற்று வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

அதிக அதிகபட்ச வெப்பநிலை மற்றும் மிதமான காற்று காரணமாக ஏற்படக் கூடிய ஈரப்பத இழப்பினை ஈடுசெய்ய பயிர்களுக்கு அதிக அளவில் நீர் பாசனத்தினை மேற்கொள்ளவும்.

**கால்நடை வளர்ப்பு :**

பகல் பொழுதில் காணப்படும் அதிக வெப்பத்தின் காரணமாக ஆடு, மாடுகள் செயற்கை கருத்தரிப்பினை காலையில் 9 மணிக்குள் அல்லது மாலை 4 மணிக்கு பிறகு செய்ய வேண்டும்.

கால்நடை வளர்ப்போர் பகல் நேரங்களில் 30-60 நிமிட இடைவெளியில் 1 முதல் 5 நிமிடங்களுக்கு விலங்குகளின் உடலில் நேரடியாக தண்ணீரை தெளிப்பதன் மூலம் வெப்ப அழுத்தத்தில் இருந்து விலங்குகளை பாதுகாக்கலாம். மாட்டு கொட்டகையின் பக்கவாட்டில் (ஓரங்களில்) ஈரமான

செய்வதற்காக வெப்பமான காலநிலையின் போது விலங்குகளுக்கு அதிகரித்த தாது உப்புச் சேர்க்கையை உறுதி செய்யவும். கால்நடைகளுக்கு குறிப்பாக பொட்டாசியம் நிறைந்த தாதுக்கலவையினை வழங்குவதில் முன்னுரிமை அளிக்க வேண்டும்.

**விவசாயம் :**

பயறு வகைகள், காய்கறிப் பயிர்கள் மற்றும் நிலக்கடலை பயிர்களில் சாறு உறிஞ்சும் பூச்சிகள் தென்படும் இதனை கட்டுப்படுத்த 5% வேப்பங்கொட்டை கரைசல் தெளிக்கலாம்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**

**முக்கிய பயிர்கள் : மிளகு, ஏலக்காய், கால்நடை.**

**மிளகு:**

கோடை காலத்தில் மிளகு கொடிகளுக்கு வட்ட பாத்திகள் அமைக்க வேண்டும்.

வட்டப்பாதிக்குள் வேர் உட்பூசண உரம் மற்றும் மண் புழு உரங்களை இட்டு அதன் மேல் காய்ந்த இலைகளை கொண்டு மூடாக்கு அமைத்து உடனடியாக அதிக நீர்ப்பாசனம் செய்ய வேண்டும்.

இதன் மூலம் மகசூலை அதிகரிக்க செய்யலாம் ( மார்ச் மாதத்தில் ஒரு முறையும் மறுபடியும் ஏப்ரல் மாதத்தில் ஒரு முறையும் இதை செய்யவும்).

**ஏலக்காய்:**

மொசைக் அல்லது கட்டே நச்சுயிரி நோய் ஏலக்காயை தாக்கும் ஒரு முக்கியமான நோய் ஆகும். இதனால் அதிக அளவில் மகசூல் பாதிக்கப்படும்.

வாழை அசுவினி பூச்சி மூலம் இந்நோய் பரப்பப்படுகிறது. எனவே நோய் பரப்பும் பூச்சியைக் கட்டுப்படுத்த வேண்டும்.

ஒரு எக்டருக்கு 750 மில்லி பாஸ்போமிடான் அல்லது மீதைல் டெமட்டான் அல்லது டைமித்தோயேட் தெளித்து இப்பூச்சியை கட்டுப்படுத்த வேண்டும்.

**கால்நடை:**

கால்நடை வளர்க்கும் விவசாயிகள் தங்களின் ஆடுகளுக்கு உருளை மற்றும் நாடப்புழுக்கான குடற்புழு நீக்க மருந்தினை மே - ஜீன் மாதத்தில் அளிக்கலாம். குடற்புழு நீக்க மருந்துகளை அதிகாலை வேளையில் ஆடுகளுக்கு வெறும் வயிற்றில் கொடுக்க வேண்டும்.

.